## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

## MCOP. No.1000/2016

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குணசேகர் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். 31.01.2016 முதல் 11.02.2016 வரை நான் மருத்துமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றது சம்மந்தமாக உயிர்ப்பு சான்று ம.சா.ஆ.12, மருத்துமனையில் வழங்கப்பட்ட மருத்துவ பில் ம.சா.ஆ.13 (எதிர்மனுதாரர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது.) என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.14,

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை:**

விபத்து சமயத்தில் திருச்சி – சென்னை ரோட்டில் நாங்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்துகொண்டிருந்தோம். நான் வந்த மோட்டார் சைக்கிளை இறந்துபோன ராமச்சந்திரன் ஓட்டிவந்தார். அந்த மோட்டார் சைக்கிள் என்னுடையதாகும். ராமச்சந்திரன் வண்டியை ஓட்ட நானும், பவுன் மாணிக்கமும் பின்னால் அமர்ந்திருந்தோம். அது Splender மோட்டார் சைக்கிள் ஆகும். அதில் 2 பேர் தான் பயணம் செய்யவேண்டும் என்றால் சரிதான். அது 3பேர்கள் பயணம் செய்தால் அதை ஓட்டுபவருக்கு சிரமமாக இருக்கும் என்றும், இயல்பாக ஓட்ட

முடியாது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் ஊருக்கு பிரியும் சாலை திருச்சி சென்னை நான்கு வழி சாலைக்கு கிழக்கு பக்கமாக உள்ளது. நான் தான் விபத்து சம்மந்தமாக புகார் கொடுத்தேன். புகாரில் கிழக்கு நோக்கி திரும்பியபோது விபத்து நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த இடம் U-Turn என்றால் சரிதான். அங்கு திரும்புவதற்கு முன்பு வண்டியை நிறுத்துவதற்கு ஒரு இடம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் நின்று எதிர்திசையில் வண்டி எதுவும் வருகிறதா என்று பார்த்துவிட்டு திருப்ப வேண்டும் என்றால் சரிதான். நிருபண வாக்குமூலத்தில் அவ்வாறு நின்று பார்த்துவிட்டு திரும்பியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரில் அம்மாதிரி சொல்லவில்லை என்றால் சரிதான். திரும்புவதற்காக காத்திருக்கும் இடம் நடுகட்டையை ஒட்டி பக்கவாட்டில் உள்ளது என்றால் சரிதான். நான் கூறுவது போன்று அங்கு நின்றிருந்தால் விபத்து நடந்திருக்காது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நாங்கள் எதிரில் வந்த வாகனங்களை கவனிக்காமல் 3பேருடன் மோட்டார் சைக்கிளில் சென்று திடீரென்று ரோட்டின் குறுக்கே கடந்து விபத்தை ஏற்படுத்திகொண்டோம் என்றால் சரியல்ல. இறந்துபோன ராமச்சந்திரனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அவர் பணம் கட்டியிருந்தார் உரிமம் வரவில்லை. அந்த இடத்தில் விபத்துகளை தவிர்ப்பதற்காக இரண்டு பக்கமும் பேரிகார்ட் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் வாகனங்கள் வேகமாக வரமுடியாது என்றால் சரியல்ல. விபத்து நாங்கள் வந்த ரோட்டின் கிழக்கு பகுதியில் நடந்தது என்றால்சரியல்ல. விபத்து நடந்தவுடன் நானும், இறந்துபோனவரும் SRM மருத்துமனைக்கு சென்றோம். அங்கு மருத்துவர்கள் விபத்து எப்படி ஏற்பட்டது என்று கேட்டு எழுதிக்கொண்டார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. பவுன் மாணிக்கத்திற்கு விபத்தில் காயம் இல்லை என்றால் சரியல்ல. அவருக்கு காயம் ஏற்பட்டது. பவுன் மாணிக்கம் மருத்துவமனைக்கு வந்தரா என்று எனக்கு தெரியாது. விபத்து பதிவேட்டு நகலை தாக்கல் செய்தால் என்மீதும், இறந்துபோனவர் மீதும் தவறு உள்ளது

என்ற விவரம் தெரிந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துமனையில் இருந்து 11.02.2016ம் தேதி விடுவிடுவிக்கப்பட்ட பின்னர் வேறு எங்கும் சென்று சிகிச்சை எடுக்கவில்லை. நான் முழுமையாக குணமடைந்துவிட்டேன் என்றும், எனக்கு எந்தவிதமான பாதிப்பும் கிடையாது என்றால் சரியல்ல. நான் பெயிண்டராக வேலைபார்த்து தினமும் ரூ.500/- வருமானம் ஈட்டியுள்ளேன் என்பதை காட்ட ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயங்களினால் எனக்கு வருமான இழப்போ அல்லது உடல் ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு மோட்டார் சைக்கிளை ஓட்டிசென்ற ராமச்சந்திரன் தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் லாரி பேரிகார்ட் அருகில் மெதுவாக தான் வந்தது என்றால் சரியல்ல. நான் அதிகமான இழப்பீடு கோரியுள்ளேன் என்றும், அது கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் ராமச்சந்திரன் ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.